millennia institute

Candidate Name: ______________

Adm No

Higher 2
உயர்தரம் 2

# மிலெனியா கல்வி நிலையம்

**2022 End-of-Year Exams**
Pre-university 2

தமிழ்மொழி, இலக்கியம்
தாள் 1

**9577/1**

**TAMIL LANGUAGE AND LITERATURE**
**Paper 1**

**13 Sep 2022**
**1 hour 15 minutes**

Additional Materials: Answer Book

## தேர்வு எழுதுவோர்க்கான குறிப்புகள்

1 கொடுக்கப்பட்டுள்ள குறிப்புகளைப் படித்து நன்கு புரிந்துகொண்டு அவற்றின்படி வினாவுக்கு விடையெழுதவேண்டும்.

2 விடையைக் கொடுக்கப்பட்டுள்ள விடைப்புத்தகத்தில் எழுதவேண்டும்.

3 பயன்படுத்தப்பட்ட அல்லது பயன்படுத்தப்படாத எந்தவொரு விடைப்புத்தகத்தையும் தேர்வு நடைபெறும் மண்டபத்திலிருந்தோ அறையிலிருந்தோ வெளியே எடுத்துச் செல்லக்கூடாது.

4 நீங்கள் அங்கீகரிக்கப்பட்ட அகராதி ஒன்றினைப் பயன்படுத்தலாம்.

பின்வரும் தலைப்புகளுள் ஏதேனும் ஒன்றுக்கு மட்டும் 350 சொற்களுக்குக் குறையாமல் ஒரு கட்டுரை வரைக. **(35 மதிப்பெண்கள்)**

இவ்வினாத்தாள் 2 அச்சிடப்பட்ட பக்கங்களைக் கொண்டுள்ளது.


More papers at www.testpapersfree.com

1 'மனிதனை மனிதனாக்குபவை உதவிகளும், வசதிகளும் அல்ல; இடையூறுகளும் துன்பங்களுமே'. – கருத்துரைக்க.

2 'பயமும் தயக்கமும் உள்ளவனைத் தோல்வி தொடர்ந்துகொண்டே இருக்கும்' என்னும் கருத்தை நிரூபிக்கும் வகையில் உன் வாழ்வில் நிகழ்ந்த ஒரு சம்பவத்தையும் அதன்மூலம் நீ கற்றுக்கொண்ட படிப்பினையையும் விளக்கி ஒரு கட்டுரை எழுதுக.

3 'நீ வாழ்க்கையில் முன்னேற வேண்டுமானால் உன்னுடைய கால்களால் நடந்துபோ. ஏனையோரின் முதுகின்மேல் ஏறிப் போகாதே; அது உனக்கு ஆபத்து' – நியேட்சே. இக்கருத்தை நீ ஏற்றுக்கொள்கிறாயா?

4 பின்வரும் சூழலைக் கொண்டு ஒரு கட்டுரை வரைக.






றும்



More papers at www.testpapersfree.com

Candidate Name: ______________________ Class | Adm No

| Class | Adm No |
| --- | --- |
| | |

H Higher 2
உயர்தரம் 2

millennia institute

# மிலெனியா கல்வி நிலையம்

## 2022 End - of -Year Exams

Pre-university 2

தமிழ் மொழி, இலக்கியம்
தாள் 2

**9577/02**

**Tamil Language and Literature**
Paper 2

**15 Sep 2022**

**1 hour 45 minutes**

**Additional materials: Answer Book**

தேர்வு எழுதுவோர்க்கான குறிப்புகள்

1 இவ்வினாத்தாளில் இரண்டு பிரிவுகள் உள்ளன.

2 'அ' பிரிவில் ஒரு பனுவலும் அதனையொட்டி ஐந்து வினாக்களும் இடம்பெற்றுள்ளன. 'ஆ' பிரிவில் இரண்டு பனுவல்களும் அவற்றையொட்டி நான்கு வினாக்களும் இடம்பெற்றுள்ளன. இவ்விரு பனுவல்களையும் கருத்தூன்றிப் படித்து இவற்றையொட்டி அமைந்த வினாக்கள் அனைத்துக்கும் சொந்த நடையில் விடையெழுதவேண்டும்.

3 தேர்வாளர் கூறியதும் 'START' என்பதைக் கிளிக் செய்து தேர்வெழுதத் தொடங்கவும்.

இவ்வினாத்தாள் 8 அச்சிடப்பட்ட பக்கங்களைக் கொண்டுள்ளது.

More papers at www.testpapersfree.com

| H Singapore –Cambridge General Certificate of Education Advanced Level | Duration 1h 45m 0s |
|---|---|
| ‘அ’ பிரிவு | |
| சுயவிடைக் கருத்தறிதல் 1 (32 மதிப்பெண்கள்)<br>பின்வரும் கட்டுரைப் பகுதியைக் கருத்தூன்றிப் படித்து, அதனையொட்டி அமைந்த வினாக்களுக்குச் சொந்த நடையில் விடை எழுதுக. | வினாக்கள் |
| பசியைப் பிணி என்கிறது மணிமேகலை. அட்சயப் பாத்திரத்தைக் கையில் ஏந்தி உலகின் பசிப்பிணியைப் போக்குகிறாள் மணிமேகலை. இப்படி ஒரு கதாபாத்திரமோ, அட்சய பாத்திரமோ இந்தியாவின் வேறு மொழி இலக்கியங்கள் எதிலும் இடம்பெற்றிருக்கிறதா என்று தெரியவில்லை. பசியாற்றுவதை அறமாகக் கருதிய தமிழ்ச் சமூகம் பசியால் ஏற்படும் இன்னல்களையும் வறுமையால் ஏற்பட்ட பசிக்கொடுமையின் விளைவுகளையும் <u>அழுத்தமாகப்</u> பதிவு செய்திருக்கிறது. புறநானூறு படித்தால் பசியின் குரல்தான் மேலோங்கி ஒலிக்கிறது. பசியும் வறுமையும் பற்றிச் சங்க இலக்கியம் ஏராளமாகச் சொல்லுகிறது. பசியைப் போக்குவதற்குத் துறவியான வள்ளலார்தான் அணையா அடுப்பினை உருவாக்கினார். பசியின் குரலை இலக்கியங்கள் ஆழ்ந்து கேட்கின்றன; ஆராய்கின்றன. அதற்கான தீர்வினை முன்வைக்கின்றன. "கவனம்! என் பசியை, அஞ்சிக் கவனமாய் இருங்கள், என் சினத்தை, அஞ்சிக் கவனமாய் இருங்கள்" என்ற பாலஸ்தீன கவிஞர் மஹ்மூத் தர்வீஸின் வரிகள் பசியின் பிணியில் ஒடுங்கும் ஏழை மக்களின் குரலாக எதிரொலிக்கிறது. பாரெல்லாம் நோய் பகைமை, நாடெல்லாம் மக்கள் தனிமை, பாமரன் பாத்திரத்தில் நிறைந்திருப்பதோ பசியின் வறுமை. எக்காலத்திலும் வறுமையைப் பாடாத கவிஞர் எவருமில்லை. இலக்கியத்தின் ஆதாரக் கருப்பொருட்களில் ஒன்று பசி. உணவு தனிமனிதனின் தேவை | 1 எதை இலக்கியங்கள் அறமாகக் கருதின? ஏன்? (7 மதிப்பெண்கள்)<br>2 இன்றைய தலைமுறை எவற்றை அறிந்திருக்கவில்லை? அதற்கான காரணம் யாது? (7 மதிப்பெண்கள்)<br>3 இன்றைய சமூகம் உணவை வீணடிப்பதற்கான காரணங்கள் யாவை? (5 மதிப்பெண்கள்) |



More papers at www.testpapersfree.com

மட்டுமில்லை; உணவு கொடுப்பது சமூகத்தின் பொறுப்பும் கடமையுமாகும்.

ஒரு காலத்தில் பட்டினிச்சாவு பற்றிய செய்திகள் அதிகமிருந்தன. பட்டினிச்சாவு என்பது எவ்வளவு கொடுமையானது. பஞ்சக்காலத்தில் மட்டுமில்லை வறுமையால் உணவு கிடைக்காமல் பட்டினிச்சாவு அடைந்தவர்கள் பற்றிய செய்திகள் வரலாற்றில் இருந்திருக்கிறதே? பட்டினிச்சாவு என்பது ஒரு தேசத்திற்குத் தரப்படும் <u>எச்சரிக்கை</u>. பசியின் உக்கிரத்தை, தவிப்பை அவை வெளிப்படுத்துகின்றன. பசித்த நேரம் எதுவும் கிடைக்காமல் வெறும் தண்ணீரைக் குடித்து வயிற்றை நிரப்பிக் கொண்ட பழைய தலைமுறையின் வாழ்க்கை இன்றைய தலைமுறைக்கு ஒரு மிகையான நாடகமாகக் கூடத் தோன்றக்கூடும். கிராமத்தில் அரிசிச் சோறு என்பது பலருக்கும் கனவு. எப்போதாவது தான் நெல்லுச்சோறு பொங்குவார்கள். மற்ற நாட்களில் கூழ் அல்லது கஞ்சி தான். அதுவும் சூடாகக் கிடைக்காது. இன்று நம்முடைய வாழ்க்கைத் தரம் உயர்ந்திருக்கிறது. இலவசமாகவோ அல்லது குறைந்த விலையிலோ அரிசி தரப்படுகிறது. நகரங்களில் வாழும் இன்றைய சமூகம் பல நாள் பட்டினி என்பதைப் பற்றி அறிந்திருக்கவில்லை. ஆனால், கிராமங்களில் இவ்வாழ்க்கை இன்றும் தொடருகின்றது. நகரங்களிலோ வாழ்பவர்கள் பெரும்பாலும் உணவை வீணடிப்பதும் அதன் மதிப்பை அறியாமல் நடந்து கொள்வதும் அதிகமாகியிருக்கிறது.

ஏ.கே.ராமானுஜம் தொகுத்த இந்திய நாட்டுப்புறக் கதை புத்தகத்தில் ஒரு கன்னடக் கதை இருக்கிறது. அதில் அறிவாளியான பண்டிதர் ஒருவர் வறுமையில் வாழுகிறார். அவருக்கு அன்றாடம் அரைவயிறு கால் வயிறு தான் உணவு கிடைக்கிறது. ஒரு நாளாவது வயிறு நிறையச் சாப்பிட வேண்டுமென ஆசை கொண்டிருந்தார். அவரின் வயிற்றுப் பசியோடு கடவுள் எவ்வாறு விளையாடுகிறார் என்பதே அக்கதையாகும்.

இன்றும், அம்மாக்கள் உணவைப் பிள்ளைகளுக்குத் தந்துவிட்டு மிச்சம் <u>மீதி இருக்கும் உணவைச் சாப்பிடுகிறார்கள். அவர்கள் வாழ்நாள்</u>

4 கோபம் உணவின் பக்கம் செல்லாதபோது எத்தகு விளைவுகள் ஏற்படும்?

(5 மதிப்பெண்கள்)

5 சொற்பொருள் (8 மதிப்பெண்கள்)

பின்வரும் சொற்கள் கட்டுரைப் பகுதியில் இடம் பெற்றுள்ளன. அவை ஒவ்வொன்றும் பகுதியில் உணர்த்தும் பொருளை எழுதுக.

(I) அழுத்தமாக

(II) எச்சரிக்கை

(III) உக்கிரமான

(IV) நிராகரித்தல்



More papers at www.testpapersfree.com

| | |
|---|---|
| முழுவதும் பசித்த வயிறு கொண்டவர்களே. ஆனால் வயதானபிறகு, நீங்கள் விரும்பும் நேரத்திலோ, வயதிலோ உங்கள் வயிறு உணவை அனுமதிக்காது. இளமைப்பருவம் தான் பசியின் <u>உக்கிரமான</u> பருவம். அந்த வயதில் சாப்பிடுவதைப் போல வாழ்வின் வேறு பருவங்களில் சாப்பிட முடியாது. கோபமும் வெறுப்பும் பசியைத்தான் ஆயுதமாகக் கையாளுகிறது. வீட்டில் சாப்பிடாமல் இருத்தல் அல்லது <u>நிராகரித்தல்</u> என்பது கோபத்தின் வெளிப்பாடாகும். வீட்டில் ஏற்பட்ட சண்டையில் அம்மா கொடுத்துவிட்ட உணவைத் திறந்துகூடப் பார்க்காமல் அப்படியே திரும்பிக் கொண்டுவரும் பள்ளி மாணவர்களும் உண்டு. கோபம் ஏன் உணவின் பக்கமே திரும்புகிறது. வேறு வழியில் கோபத்தைக் காட்டினால் அதன் மதிப்பு ஏன் குறைந்துவிடுகிறது. பசியை மனிதர்களால் ஒரு போதும் வெல்ல முடியாது. தணிக்கமுடியும், கட்டுப்படுத்த முடியும், அவ்வளவே. பசி தான் மனிதனை வழிநடத்துகிறது. பசிதான் மனத்தினை வெல்லுகிறது என்பதை யாரும் மறுப்பதற்கில்லை. | |

<u>வினாக்கள்</u>

<u>இங்கு சுயவிடைக் கருத்தறிதல் 1க்கான வினாக்களுக்கு விடையளிக்கவும்</u>

| | |
|---|---|
| 1 | எதை இலக்கியங்கள் அறமாகக் கருதின? ஏன்? (7 மதிப்பெண்கள்) - (இங்கு விடைகளைத் தட்டச்சு செய்யவும்) |
| 2 | இன்றைய தலைமுறை எவற்றை அறிந்திருக்கவில்லை? அதற்கான காரணம் யாது? (7 மதிப்பெண்கள்) - (இங்கு விடைகளைத் தட்டச்சு செய்யவும்) |



More papers at www.testpapersfree.com

| | |
|---|---|
| | |
| 3 | இன்றைய சமூகம் உணவை விண்டிப்பதற்கான காரணங்கள் யாவை? (5 மதிப்பெண்கள்)<br>- (இங்கு விடைகளைத் தட்டச்சு செய்யவும்) |
| 4 | கோபம் உணவின் பக்கம் செல்லாதபோது எத்தகு விளைவுகள் ஏற்படும்? (5 மதிப்பெண்கள்) - (இங்கு விடைகளைத் தட்டச்சு செய்யவும்) |
| 5 | சொற்பொருள் (8 மதிப்பெண்கள்) பின்வரும் சொற்கள் கட்டுரைப் பகுதியில் இடம்பெற்றுள்ளன. அவை ஒவ்வொன்றும் பகுதியில் உணர்த்தும் பொருளை எழுதுக. |
| | (i) அழுத்தமாக - |



More papers at www.testpapersfree.com

| | |
|---|---|
| | (II) எச்சரிக்கை -<br>(III) உக்கிரமான -<br>(IV) நிராகரித்தல் - |

## 'ஆ' பிரிவு

சுயவிடைக் கருத்தறிதல் 2 (33 மதிப்பெண்கள்)

பின்வரும் கட்டுரைப் பகுதியைக் கருத்தூன்றிப் படித்து, அதனையொட்டி அமைந்த வினாக்களுக்கு சொந்த நடையில் விடை எழுதுக.

| பனுவல் ஒன்று | பனுவல் இரண்டு |
|---|---|
| <u>கல்வியின் பெருமை</u><br><br>'கல்வி' என்பது தன்னை நாடி வந்தவர்க்குப் பெருமையையும் மேன்மையையும் தருகிறது. ஒருவரைப் புகழின் உச்சிக்குக் கொண்டு செல்கிறது. வாழ்வில் ஒளியையும் வாழ்க்கை வசதிகளையும் அளிக்கிறது. ஆகையால்தான், கல்வி கற்றவரைக் கண்ணுடையார் என்றனர். கல்வி இல்லாத வாழ்வும் கண்ணில்லாத வாழ்வும் ஒன்றுதான். எனவே, கல்வி ஒருவனுக்குக் கண்ணாக அமையும் சிறப்புடையதாகும். 'கல்வி' என்னும் சொல் கற்றலாகிய தொழிலையும் கற்கப்படுபவையாகிய நூல்களையும் கற்றலால் உண்டாகும் அறிவையும் குறிக்கிறது. அறிவு என்பது நூலறிவைக் குறிக்கிறது.<br><br>'கல்வி கரையில கற்பவர் நாள் சில' என்பது பழமொழி. இப்பழமொழியில் உள்ள 'கல்வி' என்பது நூலைக் குறிக்கிறது. 'ஒருமைக்கண் தான் கற்ற கல்வி' என்பதிலுள்ள | <u>சுயக் கற்றல்</u><br><br>வாழ்க்கையில் வெற்றி பெறும் கலையை முழுக்க முழுக்க இன்னொருவர் கற்றுத் தந்துவிட முடியாது. நாமாகத்தான் கற்க வேண்டும். நாமாகத்தான் உள்வாங்க வேண்டும். எல்லா மாணவர்களுக்கும் ஆசிரியர் ஒரே மாதிரிதான் கற்றுத் தருகிறார். அதிகமாகப் புரிந்துகொண்டு உள்வாங்கும் திறன் உடையவன்தான் அதிக மதிப்பெண் பெறுகிறான். நடிப்புக் கல்லூரியில் நடிப்பைப் படிப்பாக முடித்த எவரும் நடிகர் திலகம் சிவாஜி கணேசன் போல் ஆவதில்லை. ஒன்றைப் பிறர் சொல்லிக் கொடுப்பதைவிடத் தானே கற்றுக் கொள்வதில்தான் வெற்றி அடங்கியிருக்கிறது. நடிகர் திலகம் சிவாஜி கணேசன் எந்தக் கல்லூரியிலும் நடிப்பைக் கற்கவில்லை. உலகம் முழுவதிலும் இருந்துதான் நடிப்பைக் கற்றுக் கொண்டார். உலகில் உள்ள அனைத்து நடிகர்களையும் பார்த்து, படித்துக் கற்றுக்கொண்டார். சொல்லிக் கொடுப்பதில் வேறுபாடு |



More papers at www.testpapersfree.com

கல்வி என்பது நூலறிவினைக் குறிக்கின்றது. நல்ல நூல்களைக் கற்கும் அளவுக்கேற்ப அவருக்கு நுட்பமான அறிவு வளரும் என்பதும் 'நாம் கற்ற நூல் அளவேயாகுமாம் நுண்ணறிவு வளரும்' என்பதும் பெரியோர் கருத்து. வள்ளுவப் பெருந்தகையோ 'கற்றனைத்தூறும் அறிவு' என்பார்.

நூல்களைக் கற்றலின் நோக்கம், நூலறிவைப் பெறுவதேயாகும். நூல்களைக் கற்றலின் வாயிலாக நாம் மனத்தை நன்னெறிப்படுத்தலாம். நயத்தக்க நாகரிக வாழ்வைப் பெறலாம். ஆதலால், எல்லோரும் கல்வியைக் கற்க வேண்டும் என வற்புறுத்தப்படுகின்றது. கல்லாத மாந்தரே உலகில் இனி இல்லாமல் போகும் நிலை உருவாக வேண்டும். கற்றவர் நிறைந்த நாட்டினை 'நாகரிக நாடு' என்றும் கல்லாதவர்கள் வாழும் நாட்டைவிட விலங்குகள் வாழும் காடு மேலானது என்றும் கணிக்கப்படுகின்றது. இந்தக் கணிப்புக்குச் சாதகமாக அமைவது கல்வியேயாகும். கல்வியே ஒரு நாட்டின் தொழில்வளப் பெருக்கத்திற்கும், முன்னேற்றத்திற்கும் மூலக்காரணமாக அமைகிறது. நாட்டு மக்களின் நல்வாழ்விற்கும் நாகரிக வாழ்விற்கும் கல்வி அடிப்படையாக அமைகின்றது. அதனால், நாட்டிலுள்ள எல்லாருக்கும் கல்விக்கண்ணைக் கொடுக்க வேண்டும் என்று இன்றைய அரசாங்கம் திட்டம் வகுத்துச் செயலாற்றி வருகிறது.

நன்றி: இணையம்

இருக்க முடியாது. ஆனால், கற்றுக் கொள்வதில் வேறுபாடு இருக்க முடியும். தனித்தன்மைதான் நன்கு சுடர்விடும். தூக்கத்தில் இருந்து உடல் விழித்தால் போதாது; மனமும் விழிக்க வேண்டும்; மூளையின் சன்னல்களை மூச்சுக் காற்றால் திறக்க வேண்டும்; அப்போதுதான் நிறையச் செய்திகளைப் புரிந்துகொள்ள முடியும்.

ஹெலன் கெல்லர் என்ற பெண்மணி பார்வை அற்றவர். பார்வையில்லாத போதும் கல்வி கற்பது எப்படி என்று அவர் ஆசிரியை ஆன் சல்லிவன் கற்றுக் கொடுத்தார். ஆனால் ஆசிரியர் கற்றுக் கொடுக்காத ஆற்றலை ஹெலன் கெல்லர் சுயமாகப் பெற்றார். அதுதான் அவரை உலகின் வியக்கத்தக்க பெண்ணாக்கியது. கண் பார்வை இல்லாத இவர் தொட்டுத் தொட்டு ஒவ்வொரு பொருளையும் உணர்ந்து பெயர் குறிக்கும் வித்தையை அவரது ஆசிரியர் கற்றுக் கொடுத்தார். ஹெலன் கெல்லர் மேலும் ஒரு படி மேலே சென்று ஒரு பொருளைத் தொட்டுவிட்டு அதன் நிறம் இன்னது என்று சொல்லத் தொடங்கினார். இது ஆசிரியர் சல்லிவன் சொல்லித் தராதது.
விழிப்படைந்த மனம் அவர் விரல் நுனியில் முழுமையாக இருந்ததால், கண்களின் வேலையைக் கைகளே செய்தன. பள்ளி, கல்லூரிகளில் படித்துவிட்டால் படிப்பே முடிந்து விட்டதாகப் பலர் கருதுகிறார்கள். கல்வி நிறுவனங்கள் எதையும் முழுமையாகக் கற்றுத் தர முடியாது. எப்படிக் கற்க வேண்டும் என்கிற தொடக்கத்தைச் சொல்லித் தரலாம். கேள்விகளுக்குப் பதில் தருவது கல்வி ஆகாது. கேள்வி கேட்கும்போதுதான் கல்வி ஆரம்பமாகிறது. கேள்விகளைத் தயாரித்து, அதற்கான பதிலையும் தயாரித்து, அதை எழுதும்படி மாணவர்களையும் தயார்படுத்துபவர் ஆசிரியர் ஆகமாட்டார். கேள்விகளையும் கேட்டு அதற்கான பதிலையும் தயாரிக்கும்படி மாணவனைத் தயார்படுத்துபவரே உண்மையான ஆசிரியர் ஆவார். வாழ்க்கை ஒரு வித்தியாசமான தேர்வு. இங்கே நாம்தான் நம்மை வாழ்க்கைக்குத் தயார் செய்துகொள்ள வேண்டும்.

(தழுவல் : வெற்றி நிச்சயம்)



More papers at www.testpapersfree.com

| வினாக்கள் | |
|---|---|
| 1 கொடுக்கப்பட்டுள்ள இலக்கணக் குறிப்புகளுக்கு ஏற்ப வாக்கியத்திலிருந்து சொற்களைத் தேர்ந்தெடுத்து எழுதுக. (பனுவல் ஒன்று) (6 மதிப்பெண்கள்)<br><br>நல்ல நூல்களைக் கற்கும் அளவுக்கேற்ப அவருக்கு நுட்பமான அறிவு வளரும் என்பதும் 'நாம் கற்ற நூல் அளவேயாகுமாம் நுண்ணறிவு வளரும்' என்பதும் பெரியோர் கருத்து.<br><br>I இரண்டாம் வேற்றுமை<br>II தன்மைப் பன்மைப் பெயர்<br>III பெயரெச்சம் | விடை 1<br><br>(இங்கு விடைகளைத் தட்டச்சு செய்யவும்)<br><br>இலக்கணக் குறிப்பு:<br><br>I இரண்டாம் வேற்றுமை -<br>II தன்மைப் பன்மைப் பெயர் -<br>III பெயரெச்சம் - |
| 2 நடிப்புக் கல்லூரியில் நடிப்பைப் பற்றிப் படிப்பதனால் மட்டும் நடிகர் திலகம் சிவாஜி போல ஆகிவிடமுடியாது என்று கூறக் காரணம் யாது? (பனுவல் இரண்டு) (6 மதிப்பெண்கள்) | விடை 2 |
| 3) கற்றவர் நிறைந்த நாட்டினை எவ்வாறு அழைக்கின்றனர்? அதனால் விளையும் நன்மைகள் யாவை? (பனுவல் ஒன்று) (5 மதிப்பெண்கள்) | விடை 3 |
| 4 'கல்வி' குறித்து இரு பனுவல்களிலும் கொடுக்கப்பட்டுள்ள கருத்துகளில் எந்தப் பனுவல் அதிகத் தாக்கத்தை ஏற்படுத்தும் என்று நீ நினைக்கிறாய்? அதற்கான காரணங்களைத் தக்க சான்றுகளுடன் 140 சொற்களுக்கு மிகாமல் எழுதுக. (16 மதிப்பெண்கள்) | விடை 4 |



More papers at www.testpapersfree.com

9

More papers at www.testpapersfree.com

More papers at www.testpapersfree.com

Class

Adm No

Candidate Name: ________________

Higher 2
உயர்தரம் 2

millennia institute

# மிலெனியா கல்வி நிலையம்

**2022 End-of-Year- Exams**
**Pre-university 2**

தமிழ் மொழி, இலக்கியம்
தாள் 3

**9577/03**

**16 Sep 2022**

Tamil Language and Literature
Paper 3

**3 hours**

**Additional materials: Answer Book**

## <u>தேர்வு எழுதுவோர்க்கான குறிப்புகள்</u>

1 கொடுக்கப்பட்டுள்ள குறிப்பைப் படித்து நன்கு புரிந்துகொண்டு அதன்படி வினாக்களுக்கு விடையளிக்க வேண்டும்.

2 விடைகள் அனைத்தையும் கொடுக்கப்பட்டுள்ள விடைப்புத்தகத்தில் எழுத வேண்டும்.

இவ்வினாத்தாள் 8 அச்சிடப்பட்ட பக்கங்களைக் கொண்டுள்ளது.

More papers at www.testpapersfree.com

முக்கியக் குறிப்பு: ஒவ்வொரு பிரிவிலிருந்தும் ஒரு வினாவிற்கு விடை எழுதவேண்டும். மொத்தம் நான்கு வினாக்களுக்கு விடை எழுதவேண்டும்.

## ‘அ’ பிரிவு

நாவல், சிறுகதை

1 கலை உலகில் இருப்பவர்களின் வாழ்க்கை அவலங்களைப் பற்றிச் ‘சமுதாய வீதி’ என்னும் நாவலின் ஆசிரியர் வெளிப்படுத்தியிருக்கும் பாங்கினை விவரிக்க.
(25 மதிப்பெண்கள்)

2 இன்றைய உலக வாழ்க்கைக்கு ஏற்றவராகச் சின்னக்கண்ணு கதாபாத்திரம் அமையவில்லை என்னும் கூற்றை நீ ஏற்றுக்கொள்கிறாயா? ‘எண்ணங்கள் நிலையானவை அல்ல’ என்னும் சிறுகதையின் துணைகொண்டு ஆராய்க.

(25 மதிப்பெண்கள்)

## ‘ஆ’ பிரிவு

கவிதை

3 மனிதவாழ்வு அர்த்தமுள்ளதாய் அமையவேண்டுமெனில் அவன் எவ்வகையில் வாழ்தல் வேண்டும் என்பதைக் ‘கல்லின் காயம்’ என்னும் கவிதையின் வழிநின்று விளக்குக.
(25 மதிப்பெண்கள்)

4 ‘இன்றைய இளையர்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் ஹைக்கூ கவிதைகள் அமைந்துள்ளன’ என்று கூறலாமா? ‘ஹைக்கூ கவிதைகள்’ என்னும் தலைப்பில் அமைந்துள்ள கவிதைகளின் வழிநின்று விவரிக்க.
(25 மதிப்பெண்கள்)



More papers at www.testpapersfree.com

## ‘இ’ பிரிவு

நாடகம்

5 தன் அப்பா வரதராஜனை முற்றிலும் புரிந்துகொண்ட மகளாகவே கல்யாணி என்னும் கதைமாந்தர் உள்ளார் என்னும் கருத்தை நீ ஏற்றுக்கொள்கிறாயா? ‘ஊஞ்சல்’ என்னும் நாடகத்தின் வழிநின்று நிறுவுக.

(25 மதிப்பெண்கள்)

6 ‘சிங்கப்பூரைச் சொந்த நாடாக எண்ணாது பணம் சம்பாதிக்கும் ஓர் இடமாக மட்டுமே பார்க்கும் மனப்பான்மை உடையவர்கள் இங்கு வந்திறங்கிய குடிமக்கள்.’ – இக்கருத்து பற்றி உனது கண்ணோட்டம் யாது? ‘சிங்கப்பூர் மாப்பிள்ளை’ என்னும் நாடகத்தின் வழிநின்று கருத்துரைக்க.

(25 மதிப்பெண்கள்)

## ‘ஈ’ பிரிவு

இலக்கியத் திறனாய்வு

7 பின்னிணைப்பு 1-இல் கொடுக்கப்பட்டுள்ள ‘நதி’ என்னும் தலைப்பிலான சிறுகதையைப் படித்துத் திறனாய்வு நோக்கில் கதைக்கரு, பாத்திரப்படைப்பு, கதாசிரியர் உணர்த்த விரும்பும் கருத்துகள் ஆகியவற்றை விளக்கி எழுதுக.

(25 மதிப்பெண்கள்)

8 பின்னிணைப்பு 2-இல் கொடுக்கப்பட்டுள்ள ‘உழவித் தொழில்’ என்னும் தலைப்பிலான கவிதையைப் படித்து அதன் நயத்தை விளக்கி எழுதுக.கவிதையின் பாடு பொருள், பொருள் நயம், சொல் நயம் ஆகிய கூறுகளையொட்டி விடை அமைதல் வேண்டும்.

(25 மதிப்பெண்கள்)

(முற்றும்)



More papers at www.testpapersfree.com



<u>தலைப்பு: நதி</u> ப்பு 1

ஆறு பனியில் நனைந்துபோய்க் கிடந்தது. அசைவற்றிருந்த நீரைப் பார்த்ததும் உடம்பு சிலிர்த்தது. குளிர் என்னைக் கட்டித்தழுவி இறுக்கியது. கைகளை மார்ப்புக்குக் குறுக்காகக் கட்டிக்கொண்டேன். 'நேரமாகுதே' வைத்தியர், அண்ணாவிடம் தணிந்த குரலில் சொன்னார். அண்ணா பல் தேய்த்துவிட்டு மீதியிருந்த மாமர இலைத் துணுக்கை வீசினான். குனிந்து வாய்க்கொப்புளித்துவிட்டு, சரேலென்று நீரில் பாய்ந்தான். சட்டென்று மௌனம் கலைந்து, ஆறு குலுங்கிச் சிரித்தது. நானும் ஆற்றில் இறங்கினேன். தண்ணீரின் குளிர் என் கால் வழியாகக் கொடிவீசிப் படர்ந்து மேலேறியது. ஒரு வினாடி தயங்கினேன். பிறகு மெதுவாக உறுதியுடன் ஆற்றில் அமர்ந்தேன். மெதுவாக அள்ளி அணைத்து இறுக்கி மூச்சுத் திணற வைக்கும் குளிர் இடுப்பு, மார்பு, முகம் முழுவதுமாக. எழுந்து துண்டால் தலை துவட்டிக்கொண்டேன். அதே துண்டை நீரில் அலசிப் பிழிந்து உடுத்திக்கொண்டேன். ஈர உடைதான் சம்பிரதாயம்.

மனமும் உடலும் அறிவும் குளிரில் உறைந்து, செயலற்றுப் போயிருந்தது போலத் தோன்றியது. ஆற்றின் நீர்ப்பரப்பில் ஒரு வாழை மட்டை மிதந்துபோனது. காரணமின்றியே அதைக் கண்களால் பின்தொடர்ந்தேன். தேவையில்லாமல் செங்கதலி என்று நினைத்துக் கொண்டேன்.
வைத்தியர், சாமான்கள் அடங்கிய பெட்டியைத் தலையில் எடுத்துகொண்டார். அண்ணா ஈரத் துணிக்கு மேல் சிவப்புத்துண்டைக் கட்டிகொண்டான். அவன் முகத்தைக் கவனித்தபோது எனக்குள் சிலீரிட்டது. இறுகிய முகம், கண்களில் ஈரப் பளபளப்பு. உதடுகளைக் கடித்திருந்தான். மனம் பொங்கியது. அவனருகே போய், தோளில் கை வைத்து, பரிவுடன் ஏதாவது சொல்லவேண்டும் போல இருந்தது. 'போலாமா?' பெரியப்பா, சோமன், அண்ணா, ஊர்க்காரர்கள்...டிரீர் ரண்டம், ட்ரம்-ட்ரண்டன், ட்ரம் என்று விம்மித் துடிக்கும் பறையொலி. நடந்தோம். மௌனச் சுமை.

ஆற்றங்கரை ஓரமாகப் பச்சைப் பசேல் என்று முட்செடிகள் படர்ந்து வேலியிட்டிருந்த மசானம். தாத்தாவும் பெரியப்பாவும் பெயர்த் தெரியாத எத்தனையோ பேரும் சாம்பலான இடம். பெரியப்பாவின் சிதையைக் கூட்டிய இடத்தில் அந்தத் தென்னங்கன்று இப்போது சிறுமரமாகச் சிறகு விரித்திருந்தது. பெரிய அடிமரத்துடன் நிறையத் தென்னைகள் சிறகடித்துச் சலசலத்தன. புதிய மரங்களுக்கு இடம்விட்டு இங்கு எத்தனையோ தென்னை மரங்கள் பட்டுப்போயிருக்கும். மஞ்சன மரத்தடியில் எரிந்து, சாம்பலான சிதை. செவ்வக வடிவக் குழி. கறுப்பாக வாய்த் திறந்திருந்தது அது. நான்கு புறமும் பச்சை இலைகள் அனல்பட்டு வாடிக் கருகியிருந்தன.

ஆச்சரியமாக, மனம் சாதாரணமாக, மிகவும் சாதாரணமாக, இருந்தது. துயரமும் இல்லாமல், மகிழ்ச்சியும் இல்லாமல், வெறிச்சிட்டு. எட்டு மாசம் முன்பு லீவு முடிந்து, புறப்படும்போது அம்மா பின்னாலேயே வந்தாள்.



More papers at www.testpapersfree.com

சிரிப்பிருந்தது. எனினும் முகத்தில் ஓர் ஏக்கம். தளும்பப் போகும் கண்கள். எனக்கு மனம் இறுகித் துடித்தது. நடந்து கொஞ்சத் தூரம் போய்த் திரும்பிப் பார்த்தேன். செவேல் என்ற தென்னை மரம் காய்த்துக் குலுங்கி நிற்க, அதன்கீழ் நின்றுகொண்டிருந்தாள்.

எழுதி மாட்டிய படம் போல! சிவப்பு ஜாக்கெட்டும், வெள்ளை முண்டும், விரிந்துப் பளபளக்கும் விழிகளுமாக...வைத்தியர் சடங்குகளை இருபது வருடத் தொழில் திறமையுடன் செய்து கொண்டிருந்தார். நிறம் மங்கிப்போன புராதன ஓவியம்போல அந்தக் காட்சியும் சுற்றுப்புறமும் என்னைச் சுற்றி விரிந்தது. பறையொலி எங்கோ கேட்டது.

வைத்தியர் ஓர் ஓட்டுத்துண்டால் குழியின் உள்ளிருந்து எரிந்து வெண்மையான எலும்புகளை லாவகமாக இடுக்கி எடுத்து, தயாராக வைத்திருந்த புதிய மண்பானைக்குள் போடுகிறார். சடங்குகள். என் கண்களுக்குமுன் அந்தக் கரிய குழியும் அதனுள் குவிந்திருந்த சாம்பலும் மட்டும்தான் மீதியிருந்தன. அடிநாதமாக அந்தப் பறைகளின் விம்மல்.

அம்மாவின் நெற்றி ஓரம் இந்திரா காந்தி மாதிரி நரை ஓடியிருக்கும். ஐம்பத்தைந்து வயது என்று அவளைப் பற்றிச் சொல்ல ஒரே ஆதாரம். மெலிந்தது என்றாலும் உறுதியான உடம்பு. எந்த வேலையும் செய்ய அஞ்சமாட்டாள். ஒரு சமையலறையின் முழு வேலையையும் செய்து முடித்தபிறகு, இரண்டு பசுக்களைப் பராமரித்து, இடைப்பட்ட மணிகளில் சாரா தோமசும், தகழி சிவசங்கரப்பிள்ளையும் வாசித்து, அக்கம் பக்கத்துப் பெண்களுக்கு உருக்கமான கதை சொல்லி...அம்மாவின் சின்ன வயது படம் இல்லை. எனக்கு நினைவுத் தெரிந்த நாள்முதல் அவள் இப்படித்தான் இருக்கிறாள் என்று தோன்றுகிறது. அந்தக் கண்கள்! அவள் பேசுவது, சிரிப்பது எல்லாம் பெரும்பாலும் அவற்றால்தான். சின்னப் பாமரேனியன் போலப் பின்தொடர்ந்து வந்த அவள் பார்வைதான் கடைசி நினைவு.

தந்தி கிடைத்தது. ரயில் ஏறி வந்தபோது என் வீடு எனக்கு அன்னியமாகியிருந்தது. அம்மா ஒரு பிடிச் சாம்பல் ஆகிப் போயிருந்தாள். அவள் நிறைந்திருந்த வீட்டில் உறவினர்களும் மௌனமும். எலும்புகளைப் போட்டு முடித்து, சிவப்புத் துண்டால் பானையை மூடிக் கட்டி, வாழை இலையில் சுற்றி வைத்திருந்த மலர் மாலையை அதற்கு அணிவித்து, வைத்தியரின் தேர்ந்த விரல்கள் இயங்குவதை வெறித்து நின்றேன்.

வைத்தியர், அண்ணாவைப் பார்வையால் கூப்பிட்டு மண்வெட்டியைத் தந்தார். அதை வாங்கியபோது அவன் கைகள் துடித்தன. முகத்தில் நிழல் விழுந்துவிட்டதுபோல் இருந்தது. பறையொலி உச்சத்துக்கு வந்தது. மண்வெட்டியை இழுத்துக்கொண்டே இடப்புறமாகச் சுற்றி வந்த அண்ணா நின்றான். பிறகு விம்மிய உதடுகளைக் கடித்தபடி, மூன்று முறை மண்ணை அள்ளிக் குழிக்குள் போட்டான். வைத்தியர் உடனே மண்வெட்டியை வாங்கிப் பரபரவென்று இயங்க, குழி நிரம்பியது. ஒரு மண்மேடாக உருமாறியது.

சிறிய பெட்டியில் வைக்கப்பட்டிருந்த தென்னங்கன்றை வைத்தியர் எடுத்து அண்ணாவிடம் தந்தார். பறை 'விம் விம்' என்றது. அண்ணா அதை



More papers at www.testpapersfree.com

மண்மேட்டில் நட்டு, குடத்திலிருந்து நீர் மொண்டு ஊற்றி, இடப்புறமாகச் சுற்றி வந்து வணங்கினான். நானும் சோமன் அண்ணாவும் நமஸ்கரித்தோம். சடங்குகள் தொடர்ந்தன. பறையொலி அந்தப் பகுதியையே அமங்கலமாக மாற்றியது. மரக்கிளைகளில் பறவைகள் பயந்து சிறகடித்தன. அண்ணா வெளிப்படையாகவே விம்மி விம்மி அழ ஆரம்பித்திருந்தான். வைத்தியர் பானையை அண்ணா தலைமீது வைக்குமாறு எடுத்துத் தந்தார். மெதுவாக நடக்க ஆரம்பித்தோம். பறை தேம்பியது. எங்கள் சுவாசத்தில் அதன் விம்மல்கள் கரைந்தன. பறையொலியே எங்கள் சுவாசமாகியது. மறுபடி ஆற்றங்கரை வழியாக நடந்து வீட்டுக்கு வந்தபோது பகல் வெளிறத் தொடங்கியிருந்தது.

வீட்டுக்குள்ளிருந்து பீய்த்துக்கொண்டு வருவது போலக் கூட்டமாக அலறல்கள் வெளியே வந்தன. என் மனம் குலுங்கிப் போனது. கட்டுப்படாமல் கைகள் நடுங்கின. முற்றத்தில் மெழுகிக் கோலமிடப்பட்ட வட்டத்தின் நடுவில் அண்ணா பானையை வைத்தான்.
வாழை இலை, மரக்காலில் நெல், பழம், சர்க்கரை, பூ, செம்பில் துளசி நீர், குத்துவிளக்கு. குத்துவிளக்கில் ஒருவித அமங்கலம் இருந்தது. அழுகை ஒரு புயல்போல என்னைச் சுற்றி வீசியடித்தது. என்ன நடக்கிறது என்றே புரியாமல் ஒருவிதமான பித்துப் பிடித்தாற்போன்ற நிலை... பெண்கள் வலம் வந்து வணங்கி, தட்சணை போட்டு, பூ போட்டு, பூஜை செய்து. அம்மா என்று நினைத்தபோது என் மனம் இளகிப் பேயாட்டம் போடவில்லை.

உயிருடன் இருந்த போது அவளைப் பிரிந்திருக்கிறோம் என்ற நினைவே என்னை அலைக்கழிப்பது உண்டு. சடங்குகள் முடிந்த போது சூரியன் உச்சிக்குப் போயிருந்தான். மறுபடியும் அண்ணா பானையைத் தலையில் ஏற்றிக் கொண்டான். மரத்த மனத்துடன் தொடர்ந்து போகும் போது இதெல்லாம் நிஜந்தானா என்று சட்டென்று ஒரு நினைவு எழுந்தது.

ஆறு ஒளி பெற்றிருந்தது. அலை அடித்தபோது கண்கள் கூசின. எனக்கு மிகவும் பரிச்சயமான ஆறு இது. என் இளமைப்பருவத் தோழி. மழையில் அவளுடைய துள்ளல். இரவில் அவளது மௌனம். பனி பெய்யும் காலையில் அவளது நாணம். எத்தனை நெருக்கமானவள் இவள் எனக்கு. இன்று எனக்கு ஆறு பரிச்சயமேயில்லாத புதிய இடம் போலத் தோன்றியது. வளைவு திரும்பி இரு முனைகளும் மறைய முதலும், முடிவும் இல்லாமல் ஆனந்தமான ஒருவழிப் பாதையாகப் பாய்ந்து செல்லும் அவளுக்குள் எனக்குத் தெரியாத ஆயிரமாயிரம் ரகசியங்கள் இருப்பதாகத் தோன்றியது. இடுப்பளவு ஆழம்கூட இல்லாத ஆற்றுக்குப் பல்லாயிரம் மைல் ஆழம் இருப்பதாக நினைத்தேன். ஒரு நிமிடம் உடம்பு நடுங்கிச் சிலிர்த்தது.

அண்ணா ஆற்றில் இறங்கி இடுப்பளவு நீரில் நின்றுகொண்டான். அம்மா என்று விம்முவதுபோலத் தோன்றியது. 'பானையைப் பின்பக்க வழியாப் போட்டுட்டுத் திரும்பிப் பாராமல் முங்கறது' – வைத்தியர் சொன்னார். அண்ணா பானையை நழுவவிட்டான். மூழ்கினான். திரும்பிப் பார்க்கவில்லை. திரும்பிப் பார்க்க வேண்டாம். திரும்பிப் பார்த்தவன் வாழ்ந்ததில்லை! பானை மூழ்கியது. பூக்கள் – ரத்தச் சிவப்பில் செம்பருத்தியும், அரளியும், தெச்சியும் பழுப்புநிறச் செண்பகமும் – மெதுவாக மிதந்து, சுழித்து ஓடி மறைந்தன. சுடப்படாத மண்பானை. நீரில் நீல நிற ஆழத்திலிருந்து குமிழிகள் வந்தன. பிறகு சுழிப்பு. பின் நீர்ப்பரப்பு



More papers at www.testpapersfree.com

மௌனமாகியது. 'முங்கறது...நாழியாகுதே', வைத்தியர் சொன்னார். நீரில் இறங்கினேன். மூழ்கினேன். வாய்த் தடதடத்தது. மறுபடித் தலை துவட்டிக் கரை ஏறினேன். சோமன் அண்ணா வைத்திருந்த புதிய வேட்டியை உடுத்திக் கொண்டேன். பசித்தது.

எதுவும் நடக்காததுபோல நதி ஓடிக்கொண்டிருந்தது, மௌனமாக.............

நன்றி – எழுத்தாளர் ஜெயமோகன்

<u>தலைப்பு: உழவுத் தொழில்</u>

**பின்னிணைப்பு 2**

பயிர் தொழில்
இல்லையென்றால்
உயிர் தொழில்
உலகில் ஏது?

கணினி கற்றல்
சிறப்பென்பார்கள்...
கலெக்டர் ஆவது
புகழென்பார்கள்...
டாக்டர் ஆவது
லட்சியம் என்பார்கள்...
வக்கீலாவது
வாழ்க்கை என்பார்கள்...
பசி ஒன்று வந்தால்
இவர்களெல்லாம்
எதை எடுத்து உண்பார்களோ?

ஏழை எளியவர்கள்
வயலில் குனியவில்லை என்றால்
நம் நாடு
உலகில் நிமிர்ந்திடுமா?

உழவர்கள் எல்லாம்



More papers at www.testpapersfree.com

கால்பகுதி ஆடைகளையே
உடுத்துகிறார்களே...
மீதி ஆடையை
நம் தேசத்தின் மானத்தைக்
காக்கக் கொடுத்து விட்டார்களோ?

பயிரின் நுனியில்
தானியங்கள் விளைவது
எல்லோருக்கும் தெரியும்...
ஆனால்
அதன் வேரில்
நமது
பண்பாடு
கலாச்சாரம்
நாகரீகம்
வளர்ந்திருப்பது
எத்தனை பேருக்குத் தெரியும்?

உழவனின் சிறப்பைச் சொல்ல
"பசி வந்தால் பத்தும் பறந்து போகும்" என்ற
பழமொழி போதாதா....
பக்கம் பக்கமாக
எழுதிடவும் வேண்டுமா?

நன்றி - கவிதை ரசிகன் குமரேசன்



More papers at www.testpapersfree.com